# அலவ்வ பிரதேச சபை

## குருநாகல் மாவட்டம்

------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 30 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 31 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஜூலை 27 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

--------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடபட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அலவ்வ பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-------------------------------------------

மீளாய்வாண்டு ஜனவரி முதல் ஜூன் வரையான 06 மாத காலப் பகுதிக்காக முத்திரைக் கட்டணம் என ரூபா 5,702,994 தொகை ஒன்று கிடைத்திருந்த போதிலும் வருமானச் செலவுக் கணக்கிற்கு ரூபா 1,543,964 மாத்திரமே எடுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 4,159,030 தொகையினால் குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதே போல் 2014 ஆண்டின் அடுத்த 06 மாதத்திற்கான முத்திரைக் கட்டணத்தை அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்திருக்கவில்லை.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

-------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான 02 கணக்கு விடயங்கள் தொடர்பாக குறிப்பிட்ட கணக்கு மற்றும் தொடர்புடைய துணைப் பதிவேடு இடையே ரூபா 470,875 இற்கான இணக்கமின்மை ஒன்று காணப்பட்டது.

1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

-----------------------------------------------------------------------------------------------

(அ) 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 25,999,408 தொகையாகும். அவற்றில் மொத்தமாக நூற்றிற்கு 19 என ரூபா 1,383,883 தொகையொன்று 3 வருடங்களை மிகைத்த காலம் முதல் காணப்படும் மீதிகளாகும்.

(ஆ) 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 26,281,242 ஆக காணப்பட்டது. அவற்றில் மொத்தமாக நூற்றிற்கு 5 என ரூபா 1,221,324 தொகை ஒன்று 3 வருடங்களை மிகைத்த காலம் முதல் காணப்படும் வைப்பு மீதிகளாகும்.

02. நிதி மீளாய்வு

-----------------------

2.1 நிதி விளைவுகள்

----------------------------

சமர்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் வருமானத்தை மிகைத்த மீண்டுவரும் செலவு ரூபா 80,822 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,473,513 ஆக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 4,554,335 இற்கான வீழ்ச்சியொன்று காணப்பட்டது. இந்த நிதி விளைவிற்கு ரூபா 16,446,372 இற்கான மூலதன உதவி மற்றும் ரூபா 18,730,532 இற்கான மூலதன செலவுகளை சீராக்கல் மேற்கொண்ட போது மீளாய்வாண்டிற்கான நிதி விளைவு ரூபா 2,364,982 இற்கான பற்றாக்குறை ஆக மாறியுள்ளது.

2.2 பகுப்பாய்வு ரீதியான நிதிச் செயலாற்றுகை

-----------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான சபையின் மொத்த மீண்டுவரும் வருமானமாகிய ரூபா 42,609,538 தொகையில் மொத்தமாக நூற்றிற்கு 74 தொகை என ரூபா 35,303,820 தொகையும் சபையினால் உருவாக்கிய வருமானம் அல்லாத நீதிமன்றத் தண்டப் பணம், முத்திரைக் கட்டணம், சம்பள மீளளிப்பு போன்ற படிகள் தன்மையுள்ள பெறுவனவுகளினை அடக்கியுள்ளது.

(ஆ) மூலதன வருமானமாகிய ரூபா 16,466,372 இற்கான மொத்தத் தொகையும் கமநெகும, மகநெகும போன்ற மூலங்களின் மீது வேறு நிறுவனங்களின் மூலம் அதிகாரப் பிரதேசத்தில் அபிவிருத்தி விடயங்களுக்காக வழங்கியிருந்த பணங்களை அடக்கியுள்ளது.

(இ) மீளாய்வாண்டிற்கான மொத்த மீண்டுவரும் செலவு ஆகிய ரூபா 47,690,360 இல் மொத்தமாக நூற்றிற்கு 74 என ரூபா 34,435,674 தொகை ஒன்று தனிப்பட்ட சம்பளத்திற்காக செலவுகளாகும். அத்துடன் அவற்றில் மொத்தமாக நூற்றிற்கு 89 என ரூபா 27,977,330 இற்கான சம்பள மீளளிப்பு என உள்ளூராட்சி ஆணையாளரிடம் கிடைக்கப்பெற்று வருமான உதவியின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஈ) மூலதனச் செலவு ஆகிய ரூபா 18,730,532 தொகையில் மொத்தமாக நூற்றிற்கு 37 என ரூபா 6,882,510 தொகை மாத்திரம் சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்ததுடன் மீதியான நூற்றிற்கு 63 ஆகிய ரூபா 11,848,022 இற்கான தொகை கமநெகும, மகநெகும ஆகிய மூலங்களின் மீது வேறு நிறுவனங்களின் ஏற்பாடுகளின் மூலம் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி விடயங்களை அடக்கியுள்ளது.

2.3 வருமான நிருவாகம்

-----------------------------------

நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

-----------------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய நீதி மன்றத் தண்டப் பணம் ரூபா 2,280,587 தொகையும் முத்திரைக் கட்டணம் ரூபா 1,383,883 தொகையும் காணப்பட்டது.

03. செயற்பாட்டு மீளாய்வு

-------------------------------------

3.1 முகாமைத்துவ திறமையின்மை

---------------------------------------------------

நாரம்மல பிரதேச சபை 2011 ஏப்ரல் 01 திகதி பகிரப்பட்டு நாரம்மல பிரதேச சபை மற்றும் அலவ்வ பிரதேச சபை என பிரிக்கும் போது அலவ்வ பிரதேச சபையின் 3 நடைமுறை கணக்குகளின் கீழ் உண்மையான மீதிகள் பகிரப்பட்டிருந்த ஐந்தொகையில் நடைமுறை கணக்கு மீதிகளிடையே ரூபா 1,621,055 இற்கான இணக்கமின்மைகள் காணப்பட்டது.

3.2 பயன்படுத்தப்படாத மற்றும் குறைபயன்பாட்ட சொத்துக்கள்

-----------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டின் போது நிலையான சொத்துக்களின் கீழ் ரூபா 1,589,178 பெறுமதியான பயன்படுத்தப்படாத 05 சொத்து விடயங்கள் காட்டப்பட்டிருந்தன.

04. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்